1987 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

திரு. எஸ். என். இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 37,73,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

6. அரசினர் தீர்மானம்.

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"பேரவை விதி 25(1)-ன் கீழ் பேரவை இன்று * ஒத்தி வைக்கப்பெற்று மீண்டும் ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள் திங்கட் கிழமை காலை 10-00 மணிக்குக் கூடலாம்".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 20—4—1987, திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.